# இலங்கை அரசியலில் இடதுசாரிகளின் வீழ்ச்சி - ஒரு நோக்கு

சி.பிரசாத், கே.ரீ.கணேசலிங்கம்*

Department of Political science, Faculty of Arts,

University of Jaffna,

**ஆய்வின் சுருக்கம்**

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் பொதுவான போக்கு மாக்ஸிய அரசியல் மரபு உலகத்தை ஆக்கிரமித்தது போல் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தியது.பித்தானிய முதலாளித்துவத்தின் காலனித்துவ ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கு மாக்ஸியம் பெரும் ஒத்துழைப்பினை வழங்கியதுகவே அதன் முக்கியத்துவம் விரிவடைந்து மக்கள் மத்தியில் இயக்கமாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இது பின்னர் இலங்கை அரசியலில் இடம்பிடித்த இடதுசாரி இயக்கங்கள் படிப்படியாக தமக்குள்ளே ஏற்பட்ட முறிவினாலும் முதலாளித்துவத்தின் தந்திரோபாயத்தினாலும் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்தது.இதன்வீழ்ச்சிக்கு உதவும் வகையில் உலக அரசியல் மாற்றமும் மாக்ஸியத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியம் அதன் முழுமையை பாதித்தது. இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியாக லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 78 ஆண்டுகள் நிறைவுபெறுகின்றது. ஏனைய இடதுசாரிக் கட்சிகள், குழுக்கள், இயக்கங்கள் என்பவற்றுக்கு 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு இருந்து வருகின்றது. இது அரை நூற்றாண்டு காலத்தைத் தாண்டி நிற்கும் இடதுசாரி இயக்கத்தின் போக்கு தவிர்க்க முடியாத அரசியல் பிரஞ்ஞையை தந்துள்ளதென்பதை விளங்கிக்கொள்வது அவசியம்.

**திறவுச்சொற்கள்:** இடதுசாரிமரபுகள், பூர்சவாக்கள், தொழிலாளர் வர்க்கம், இடதுசாரிக் கட்சிகள், தேசிய இனப்பிரச்சினை.

* Corresponding Author: sripirasath_87@yahoo.com